# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

## O.S.No. 26/2023

## வழக்கு சாட்சி PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பௌசியா பேகம்** | தொழில் | : இல்லத்தரசி |
| தகப்பனார் பெயர் | : –––––– | கணவர் பெயர் | : அப்துல் அஜிஷ் |
| கிராமம் | : சென்னை | இனம் | : பெண் |
| தாலுகா | : சென்னை | வயது | : 55/2025 |
| மாவட்டம் | : சென்னை | நாள் | : 10.10.2025 |

<u>முதல் விசாரணை :</u>

நான் இவ்வழக்கில் வாதி தரப்பின் 2ம் சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். எனது தரப்பில் குறியீடு செய்ய ஆவணங்கள் எதுவும் இல்லை. .

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாராணை :</u>

இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரப்பெற்றதா என்றால் இல்லை . நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளின் விபரம் நான் சொல்லி தயாரிக்கப்பட்டவை. வாதி அழைத்தன்பேரில் நான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். அப்துல் அஜிஷ் என்பவரின் மனைவி என்றால் சரிதான் , எனது அடையாளத்தை நிரூபிக்கும் பொருட்டு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் , எனது வாக்காளர் அடையாள அட்டை , குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை கொடுத்துள்ளேன் . சசிகலா பட்டா மாற்றி பிரச்சனை செய்ததாக கணேசன் சொல்லி நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

கணேசன் சசிகலா மீது வழக்கு தொடுத்துள்ளார் . நான் படித்துப்பார்த்துதான் நிரூபண வாக்குமூலத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு 209/2008 என்பபதை வாதி நகல் எடுத்துப்பார்த்து அன்பேரில் எனக்கு தகவல் சொன்னார் என எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் 2019 ல் காலமாகிவிட்டார். அசல் வழக்கு எண்.209/2008 என்ற வழக்கில் எனது கணவர் அவரது வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வழக்கு நடத்திவந்தார் என்ற விபரம் எனது கணவர் சொல்லிதான் எனக்குத்தெரியும். அசல் வழக்கு எண் .209/2008 என்ற வழக்கானது எனது கணவருக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அது குறித்த விபரம் எனக்கு தெரியாது . அந்த தீர்ப்பினை எதிர்த்து எனது கணவர் மேல்நடவடிக்கை எதுவும் எடுத்தாரா என்றால் அதுகுறித்து எனக்கு நினைவில்லை.

அசல் வழக்கு எண் .209/2008 என்ற வழக்கில் ஆவணங்களில் எனது கணவர் கையொப்பம் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது . எனது மாமனார் முகமமது உசேன் என்பவர் கந்தையா என்பவருக்கு 10.02.1982 ம் தேதி இந்த வழக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுகுறித்த விபரம் எனக்கு தெரியாது . 29.11.1983 ம் வருடம் கந்தையா என்பவர் தாவா சொத்தை மணிநாதன் என்பவருக்கு கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது . தாவா சொத்தை மணிநாதன் பிரதிவாதியின் தாயாரான லட்சுமியம்மாள் என்பவருக்கு 04.12.1995 ம் தேதி கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுகுறித்த விபரம் எனக்கு தெரியாது.

லட்சுமியம்மாள் வழக்கின் பிரதிவாதி சசிகலாவிற்கு தாவா சொத்தை தாவா சொத்தை கிரையமாக கொடுத்துள்ளார் என்றால் அதுகுறித்த விபரம் எனக்கு தெரியாது . கிரையம் பெற்ற தேதியிலிருந்து சசிகலா தற்போதுவரை அவரது அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல . தற்போது தாவா சொத்து பெயரில் உள்ள பட்டா சசிகலா பெயரில் உள்ளது என்றால் சரிதான், சசிகலா 2023 ல் தான் பெயர் மாற்றம் செய்துள்ளார்.

அதற்குமுன்பு எனது கணவர் அப்துல் அஜிஷ் பெயரில்தான் இருந்தது. அசல் வழக்கு எண் .209/2008 என்ற வழக்கில் பகிரப்பட்ட தீர்ப்பு செல்லதக்கதல்ல என பரிகாரம் கோர அப்துல் அஜிஸ் -ஐ தவிர இந்த வழக்கின் வாதிக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை என்றால் சரிதான் . எனது நிரூபண வாக்குமூலத்தின் 4 வது பத்தியில் எனது கணவரின் கையொப்பத்தை மோசடி செய்து தீர்ப்பு பெற்றுள்ள விபரம் எனக்கு தெரியவந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . ஒரு கையெழுத்தானது முறையான தடய அறிவியல் ஆய்வு மூலம் நிபுணரின் ஒப்புதல் பெற்றதால்தான் ஒரு கையொப்பம் போலியானதா , இல்லையா என அறுதியாக சொல்ல முடியுமா என்றால் சரிதான் . எனது கணவரின் கையொப்பம் மேற்சொன்னது போன்று ஆய்விற்கு உட்படுத்தி மோசடி கையெழுத்து என மெய்பிக்கும் பொருட்டு ஆவணங்கள் எதுவும் நான் முன்னிலைப்படுத்தியுள்ளேனா என்றால் இல்லை.

பொதுவாக பத்திரப்பதிவு அலுவலகத்தில் ஆவணங்கள் முறையாக இருந்தால் பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றால் அதுகுறித்த விபரம் எனக்கு தெரியாது . எனக்கு நேரடியாக எந்த விபரமும் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN — Digitally signed by R ARUN PANDIAN Date: 2025.10.10 17:04:56 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.